DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.28/2024**

Prosecution witness **PW.8 (LW.9)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Sankaran (SSI) | Caste | : | |
| Father Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |
| Time | : | | | | |

**(A1, A2 present. Respective accused counsel present)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **06.02.2026**

**06.02.2026 முதல் விசாரணை** :

1. நான் வெலிங்டன் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இதற்கு முன்பு கொலக்கொம்பை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது கடந்த 09.02.2024ம் தேதி பகல் 15.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது மேல் பாரதி நகரை சேர்ந்த அ.சா.1 தனபால் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகார் மனுவினை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.22/2024 இதச பிரிவுகள் 294(பி), 324, 427, 506(2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும்)** முதல் தகவல் அறிக்கையுடன் புகார் மனுவை இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும் இதர நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

3. அன்றைய தினம் பகல் 15.45 மணிக்கு வழக்கின் சம்பவயிடமான மேல்பாரதி நகருக்கு சென்று சாட்சிகள் அ.சா.5 தியாகராஜன், சாட்சி எண்.7 செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகும்**) பின்னிட்டு 16.15 மணிக்கு சம்பவயிடத்திலிருந்து எதிரிகள் குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய அ.சா.பொ.1 மரக்கட்டை ஒன்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன்.

4. பின்னிட்டு சாட்சிகள் தனபால், மங்களேஸ்வரி, ஸ்ரீகாந்த், பொன்னம்பலம், ராமச்சந்திரன், தியாகராஜன், செந்தில்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவரவே எதிரிகளை தேடி வந்த நிலையில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அன்றைய தினம் 17.00 மணிக்கு மேல்பாரதி நகர் மைதானத்தில் வைத்து 1, 2 எதிரிகளை கைது செய்து நிலையம் கொண்டு வந்து தகுந்த வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட சான்று பொருளை படிவம் –91 தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (**அந்த படிவம் –91 அ.சா.ஆ.8 ஆகும்**)

5. பின்னிட்டு வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திருமதி.வளர்மதி அவர்களின் பார்வைக்கு வைத்தேன். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :–

1. 07.02.2024ம் தேதி எதிரிகளின் தாயாரை தாக்கியதாக அ.சா.1 தனபாலின் மகன் ஐயப்பன் மீது ஒரு வழக்கு எங்கள் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 08.02.2024 என்றால் சரிதான். புகாரானது 09.02.2024ம் தேதி பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

காலதாமதத்திற்கான காரணம் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

2. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு தான் சம்பவயிடத்திற்கு சென்றேனா என்றால் ஆம். அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகஜரில் குற்ற எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.7 மாதிரி வரைபடத்தில் விறகு கட்டைகள் அடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவமனை சென்று அ.சா.1 புகார்தாரரிடம் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்தேனா என்றால் இல்லை.

3. புகாரில் 09.02.2024ம் தேதி எனக்கு வலி அதிகமானதால் குன்னூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்காக சேர்ந்ததாக அ.சா.1 குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேலும் மருத்துவர் என்னை பரிசோதித்துவிட்டு முதலுதவி சிகிச்சை அளித்து உதகை அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து வெளிநோயாளியாக சிகிச்சையளித்து அனுப்பியதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. பொய்யான புகாரின் அடிப்படையில் முன்விசாரணை மேற்கொள்ளாமல் தவறான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றும், சம்பவயிடத்தில் வைத்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றும், வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

Thiru.R.Abdul Salam, B.A,B.L

Digitally signed by Thiru.R.Abdul Salam, B.A,B.L
Date: 2026.02.06 10:21:55 +0530

JUDICIAL MAGISTRATE,
COONOOR.